අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/02/29/02/02/18 | ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. | දිනය / திகதி / Date 2019.03.06

சுற்றுநிருப இலக்கம்: 09/2019

Tamil Translation

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

## இலங்கை ஆசிரியர் சேவையில் உள்வாங்கல், பதவியுயர்வு மற்றும் சம்பளத் திருத்தங்களை அமுல்படுத்துவது தொடர்பான பொது அறிவுறுத்தற் கையேடு

இல 1885/38 மற்றும் 2014.10.23ம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலமாக தாபிக்கப்பட்ட 2008.07.01ஆம் திகதி தொடக்கம் அமுல்புடுத்தப்பட்ட புதிய ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு விதிகளுக்கமைய உள்வாங்கல், பதவி உயர்வு மற்றும் அதற்கு உரித்தான சம்பளத் திருத்தங்களின் போது மற்றும் 1994.10.06ம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு விதிகள் மற்றும் அதற்கமைவாக இடைக்கிடையே வெளிவந்த திருத்தப்பட்ட சுற்றுநிருபங்களுக்கு அமைவாக செயற்படும் போது வெவ்வேறு பிரச்சினைகள் மற்றும் முரண்பாடுகள் எழுந்துள்ளதாக மாகாணக் கல்விச் செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களோடு, ஆசிரிய தொழிற் சங்கங்களினால் முன்னிலைப்படுத்தப்பட்ட கடிதம் மற்றும் கோரிக்கைகள் மூலமாக அறியக் கூடியதாக இருந்தன. அதன்படி, அத்தகைய விடயங்களுக்கான விளக்கங்களை வழங்குவதற்கு தீர்மானித்திருப்பதுடன் ஆசிரியர்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ள சேவை தொடர்பான முரண்பாடுகளை சீர் செய்வதற்காக பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அறியத்தருகின்றேன்.

**02. 1994.10.06ம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையில் உள்வாங்கல் மற்றும் பதவி உயர்வு தொடர்பான விதிமுறைகள்:**

2.1 1995.04.03 ஆம் திகதிய இலக்கம் 865/3 கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலமாக தாபிக்கப்பட்ட, 1997.03.11 ஆம் திகதிய இலக்கம் 966/5 மற்றும் 1997.05.14 ஆம் திகதிய இலக்கம் 975/6 ஐக் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலமாக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட விதிமுறைகளின் கீழ் இலங்கை ஆசிரியர் சேவை (இ.ஆ.சே),

- 3 வது வகுப்பு தரம் II
- 3 வது வகுப்பு தரம் I
- 2 வது வகுப்பு தரம் II
- 2 வது வகுப்பு தரம் I
- 1 வது வகுப்பு

எனும் தரக்கட்டமைப்புக்களோடு 1994.10.06 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்பட்டதுடன், இலக்கம் 95/7 மற்றும் இலக்கம் 97/5 கொண்ட கல்வியமைச்சின் சுற்றுநிருபம் மற்றும் இடைக்கிடையே வெளியான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட சுற்றுநிருப விதிமுறைகளுக்கமைவாக 1995.01.01 ம் திகதி முதல் அதற்குரித்தான சம்பளம் என கருதி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

2.2 1994.10.06ம் திகதி தொடக்கம், அத்திகதியில் பணியில் ஈடுபட்டிருந்த சகல ஆசிரியர்களும் இலங்கை ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படல் வேண்டும். உள்வாங்கப்படும் போது சம்பள ஏற்றத் திகதி மாற்றமடையாது என்பதோடு, அத்திகதியில் பதவி உயர்வுக்கான தகைமை பெறுதலின் அடிப்படையில் சம்பள ஏற்றத் திகதி, ஒக்கேடாபர் 06 எனவும் அதன்பின்னர் சம்பள ஏற்றத் திகதி, பதவி உயர்வுத் திகதி எனவும் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும். 1995.01.01 ஆம் திகதி உள்வாங்கலுக்குரிய சம்பளம் வழங்குவதற்கான நடைமுறைத் திகதி மட்டும் என்பதனை கவனத்திற் கொள்ள வேண்டும்.

2.3 இலங்கை ஆசிரியர் சேவைக்குரிய உள்வாங்கல் மற்றும் பதவி உயர்வுக்கான விதிமுறைகள்:

2.3.1 அ.சே.க./ஆசிரிய சேவை சுற்றுநிருப இலக்கம் 1/99, 1/99(I) மற்றும் கல்விச் சுற்றுநிருப இலக்கம் 2000/14 இன் ஊடாக 1999.09.01 ஆம் திகதி தொடக்கம் அல்லது அத்திகதிக்குப் பின்னர் பதவி உயர்வு தொடர்பாக பதவி உயர்வுத் திகதியில் இருந்து கொடுப்பனவு வழங்கும் அடிப்படையில் 2000.12.31ம் திகதி வரையிலும்,

2.3.2 கல்விச் சுற்றுநிருப இலக்கம் 2004/01 இன் ஊடாக பதவி உயர்வுத் திகதியில் இருந்து நிலுவைச் சம்பளம் உரித்துடையது எனக் கருதி 2001.01.01ம் திகதி தொடக்கம் 2003.12.31ம் திகதி வரையிலும்,

2.3.3 கல்விச் சுற்றுநிருப இலக்கம் 2005/04 இன் ஊடாக 2005.01.01ம் திகதியில் இருந்து நிலுவைச் சம்பளம் உரித்துடையது எனக் கருதி 2004.01.01ம் திகதி தொடக்கம் 2005.01.01ம் திகதி வரையிலும்,

2.3.4 கல்விச் சுற்றுநிருப இலக்கம் 2009/25 இன் ஊடாக பதவி உயர்வுத் திகதியில் இருந்து நிலுவைச் சம்பளம் உரித்துடையது எனக் கருதி 2005.01.02ம் திகதி தொடக்கம் 2008.12.31ம் திகதி வரையிலும்,

2.3.5 கல்விச் சுற்றுநிருப இலக்கம் 2011/30 இன் ஊடாக பதவி உயர்வுத் திகதியில் இருந்து நிலுவைச் சம்பளம் உரித்துடையது எனக் கருதி 2009.01.01ம் திகதி தொடக்கம் 2010.12.31ம் திகதி வரையிலும்,

இடைக்கிடையே திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.4 1994.10.06 ஆம் திகதி தொடக்கம் 2010.12.31 ஆம் திகதி வரை புள்ளிகளின் அடிப்படையில் மாத்திரம் ஆசிரியர் சேவையில் பதவி உயர்வு வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக இ.ஆ.சேவையின் பதவி உயர்வு தொடர்பாக,

2.4.1 பயிற்றப்படாத இரண்டு (02) வருட சேவைக்காலத்திற்காக ஒன்று (01) புள்ளியும், எஞ்சிய ஒரு (01) வருடமோ அல்லது அதற்கு மேலெனில் மேலதிகமாக ஒரு (01) புள்ளியும்,

2.4.2 பயிற்றப்பட்ட அல்லது ஒரு வருட (01) பட்டதாரி சேவைக் காலத்திற்கு (01) புள்ளி என்ற அடிப்படையிலும் எஞ்சிய ஆறு (06) மாத காலம் அல்லது அதற்கு மேலெனில் மேலதிகமாக ஒரு (01) புள்ளியும்,

2.4.3 பட்டப்பின் கல்வி டிப்ளோமா சித்தியடைந்தமைக்கான இருமுறை கணக்கிடாத வகையில் 01 புள்ளி

என்ற அடிப்படையில் புள்ளி வழங்குதல் இடம் பெறவேண்டும்.

2.5 இலக்கம் ED/02/29/04/07/01 மற்றும் 2006.03.21 ஆம் திகதிய "2005/04 சுற்றுநிருபத்தின் விதிமுறைகளை அமுல்படுத்துவது தொடர்பான பொது அறிவுறுத்தல் கையேடு" ஊடாக பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி சேவைக் காலத்தில் ஒரு வருடத்திற்கு மேலான 06 மாதம் அல்லது அதற்கு மேலெனில், மேலதிகமாக 01 புள்ளி வழங்குவதற்குப் பதிலாக, பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவர் பட்டத்தைப் பெறும் போது அல்லது பட்டதாரி ஆசிரியர் ஒருவர் பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் எஞ்சிய 06 மாத காலம் அல்லது அதற்கு மேலெனில் மேலதிகமாக 01 புள்ளி வழங்கும் முறைமை நடைமுறையில் இருந்தது.

2.6 1994.10.06ம் திகதி தொடக்கம் ஆசிரியர் சேவை அமுலாக்கியதன் பின்னர், சேவையில் இருந்த போது பட்டப்படிப்பை பூர்த்தி செய்ததின் அடிப்படையில்,

2.6.1 அ.சே.ஆ/அ.சே.க. சுற்றுநிருப இலக்கம் 96/02 இன் விதிமுறைகளுக்கு அமைவாக பட்டத்தைப் பெற்று ஒரு வருடம் பூர்த்தியாகும் திகதியில் இருந்து பட்டதாரி சேவைக்கு மாற்றப்படுவது அமுலில் இருந்ததுடன்,

2.6.2 கல்விச் சுற்றறிக்கை இல 2005/04 இன் விதிமுறைகளுக்கு அமைவாக, 2005.01.01 ம் திகதி தொடக்கம் நிலுவைச் சம்பளத்திற்கு உரித்துடைவர் எனக் கருதி நிரந்தர நியமனம் பெறும்போது பட்டம் பெற்றிருப்பின், நியமனத் திகதியில் இருந்தும், சேவையில் ஈடுபட்டிருந்தபோதும், பட்டத்தைப் பெற்றுக்கொண்ட தினத்திற்கு மறுதினத்திலிருந்து பட்டதாரி சேவைக்கு மாற்றப்பட்டிருக்கும் போதும், பட்டம் செல்லுபடியாகும் திகதியிலிருந்தும்,

பட்டதாரி நியமனமொன்று இருக்கின்றதெனக் கருதி ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்படல் மற்றும் பதவி உயர்வுகளின் போது நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

2.6.3 கல்விச் சுற்றறிக்கை இலக்கம் 2009/27 இன் ஊடாக பட்டச் சான்றிதழ் செல்லுபடியாகும் திகதியில் இருந்து, பட்டதாரி ஆசிரிய நியமனத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2.7 இலக்கம் 2005/04 கொண்ட கல்விச் சுற்றறிக்கையின் 02 (i), (ii) ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக முதல் நியமனத்தின் போது, பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்ட திகதியில் இருந்து நிரந்தர சேவைக்கு உரித்துடையவர் எனக் கருதி, அனைத்து வகையான பயிலுனர் மற்றும் தகுதிகாண்நிலை ஆசிரியர்களுக்கு இலக்கம் 2005/04 பொது அறிவுத்தற் கையேட்டின் 1.1.2ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொண்டு உரிய அதிகாரிக்கு (மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்/ மாகாண கல்விச் செயலாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர்) அனுப்பி நிரந்தர மற்றும் ஓய்வூதிய சம்பளத்துடன் கூடிய முறையான நியமனக் கடிதம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை கால தாமதமின்றி பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவ்வாறு முறையான நியமனக் கடிதத்தை வழங்கும் போது, சேவைக்கு உள்ளீர்ப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் நியமனத்திற்கு உரிய கல்வித் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

2.8 மேலே 1.1 பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் வகையில் 2010.12.31ம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட முதல் ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் விதிமுறைகளின் கீழ் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் அடுத்த தரத்திற்கு பதவி உயர்த்தப்படுவதற்கு உரிய சேவைக்காலத்திற்குள் பட்டப்பின் கல்வி டிப்ளோமா தகைமையைப் பெற்றுக்கொண்ட திகதியில் இருந்து இலங்கை ஆசிரியர் சேவை 2–II தரத்திற்கு நியமிப்பது நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, சேவையின் அடுத்த பதவி உயர்வுகளின் போது பட்டப்பின் கல்வி டிப்ளோமா தகைமைக்காக உரிய மேலதிகமாக 01 புள்ளியைப் பெற்றுக்கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**3. 2008.07.01 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையில் உள்வாங்கல் மற்றும் பதவி உயர்வு தொடர்பான விதிமுறைகள்:**

3.1 இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23ம் திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக தாபிக்கப்பட்டு 2008.07.01ம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் கீழ்,

3.1.1 2008.07.01 ஆம் திகதிக்கு சேவையில் ஈடுபட்டிருந்த நிரந்தர ஆசிரியர் நியமனத்தைக் கொண்ட ஆசிரியர்கள் (தகுதிகாண்/ பயிற்றப்பட்ட / ஆசிரியர் உதவியாளர் தவிர) அத்தினத்தில் இருந்த தரம்/வகுப்பு மற்றும் அதனோடு தொடர்புடைய தகைமைகளின் அடிப்படையில் 2008.07.01ம் திகதி தொடக்கம் உள்வாங்கப்பட வேண்டிய வகுப்பு/தரம், ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் 14ம் பந்தியின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும்

3.1.2 இலங்கை ஆசிரியர் சேவை 3-II வகுப்பினர், 3-II வகுப்பிற்கு உள்வாங்கப்படும் போது, ஆட்சேர்ப்பிற்கான வர்த்தமானி அறிவித்தல் மூலமாக கோரப்பட்டுள்ள தகைமைகள் முழுமைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

3.1.3 உள்வாங்கலுக்கு உரித்தான சம்பளத் திருத்தம் பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006(XII) உப அட்டவணை II இன் விதிமுறைகளுக்கு அமைவாக வெளியிடப்பட்ட கல்விச் சுற்றறிக்கை இலக்கம் 35/2014 (04,06,07,08 பந்திகள் தவிர) மற்றும் கல்விச் சுற்றறிக்கை இலக்கம் 35/2014(I) இல் குறிப்பிடப்பட்டிருக்கும் விதிமுறைகளுக்கு அமைவாக குறிப்பிட்ட சம்பள அட்டவணையை இனங்கண்டு பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 28/2010 இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006(IV) இன் கீழ் 2008.06.30ம் திகதியன்று கிடைக்கப்பெற்ற சம்பளப் படிமுறையின் படி, படிப்படியான முறையில் அமுல்படுத்தப்பட வேண்டியதோடு, அதற்கு உரிய நிலுவைச் சம்பளம் வழங்குதல் 2011.01.01ம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

3.2 1994.10.06 திகதி தொடக்கம் 2008.06.30ம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட்ட வெவ்வேறு சம்பளத் திருத்தம், அதாவது பொ.நி.சு இலக்கம் 2/97(III) (1997.01.01 தொடக்கம்), பொ.நி.சு இலக்கம் 15/2003 (2004.01.01 தொடக்கம்), பொ.நி.சு இலக்கம 09/2004 (2004.12.01 தொடக்கம்), பொ.நி.சு இலக்கம் 06/2006 (2006.01.01 தொடக்கம்), பொ.நி.சு இலக்கம் 06/2006 (IV) (2007.06.01 தொடக்கம்), பொ.நி.சு இலக்கம் 28/2010 (2007.06.01 தொடக்கம்) சம்பளத் திருத்தத்திற்கு அமைவாக, 2008.06.30ம் திகதி வரை சரியாக மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டியதோடு, பொ.நி.சு இலக்கம் 28/2010 இன் திருத்தப்பட்ட, பொ.நி.சு இலக்கம் 06/2006(IV) இன் கீழ் 2008.06.30ம் திகதி தொடக்கம் கிடைக்கப்பெற்ற சம்பள படிமுறையை அடிப்படையாகக்கொண்டு பொ.நி.சு இலக்கம் 06/2006(XII) உப அட்டவணை II இல் அந்தந்த தரத்திக்குரிய உத்தேச படிமுறை நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒத்திசைவுள்ள சம்பளப் படிமுறையில் அமர்த்தப்படல், இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கல் அடிப்படையில் சம்பளத் திருத்தத்துடனான சேவைப் பிரமாணக் குறிப்பின் விதிமுறைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் விரைவாக மேற்கொள்வதற்கான வகைகூறலை ஏற்றுக்கொள்ள வெண்டும்.

3.3 இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23ம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அறிவிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் 7:2:6 பந்தியின் விதிமுறைகளுக்கு அமைவாக இலங்கை ஆசிரியர் சேவையில் ஒரு தரத்தில் இருந்து மற்றுமொரு தரத்திற்கு நியமித்தலானது, பின்வரும் முறையில் மேலும் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

3.3.1 சேவையில் 3-II அல்லது 3-I(இ) தரத்தில் உள்ளவர் ஆசிரியர் பயிற்சியை பூர்த்திசெய்த பிறகு 3-I(ஆ) தரத்திற்கு பட்டதாரி தகைமையைப் பெற்றுக்கொண்ட பின்பு 3-I(அ) தரத்திற்கு நியமிக்கப்படுதல்.

3.3.2 சேவையில் 3-II அல்லது 3-I(இ) தரத்தைக் கொண்டவர் கல்விமாணி பட்டதாரி தகைமையை பெற்றுக்கொண்டிருப்பின் 2-II தரத்திற்கு நியமித்தல்

3.3.3 சேவையில் 3-I(ஆ) தரத்தைக்கொண்டவர் அத்தரத்தில் 5 வருட சேவைக் காலத்திற்குள் பட்டதாரி அல்லது கல்விமாணிப் பட்டத்தை பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் மற்றும் 3-I(அ) தரத்தைக்கொண்டவர் 3 வருட சேவைக் காலத்திற்குள் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கல்வித் தகைமையைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் 2-II வகுப்பிற்கு நியமித்தல்

3.3.4 கல்விமாணிப் பட்டதாரி தகைமையின் அடிப்படையில் நியமனம் வழங்கும்போது அல்லது பட்டதாரி நியமனம் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா தகைமையைப் பூரணப்படுத்தி இருப்பின் நியமனத்தில் கடமை பொறுப்பேற்ற திகதியில் இருந்து 2-II தரத்திற்கு நியமித்தல்.

இதற்குரிய சம்பள பரிமாற்றம் தாபன விதிக்கோவையின் VII:5 விதிமுறைகளின் கீழ் இடம்பெறல் வேண்டும்.

3.4 இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் 15 ஆம் அத்தியாயத்தின் விதிமுறைகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழு செயலாளரின் இலக்கம் PSC/EST/7/2/1(ii)/2012 மற்றும் 2018.03.28 ஆம் திகதிய அனுமதியின் பிரகாரம் சேவையில் பதவி உயர்வு தொடர்பாக இடைக்கால விதிமுறைகள் 2019.10.23ம் திகதி வரை நீடிக்கப்பட்டதன் அடிப்படையில் ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பின் 08 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்தந்த வகுப்பிற்கு/தரத்திற்கு உரியவாறு பூர்த்தி செய்யப்படவேண்டிய வினைத்திறன் தடைதாண்டல் தேவையிலிருந்து 2019.10.22 வரை விடுவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அத்திகதி வரையிலான ஏனைய தேவைகள் பூரணப்படுத்தப்பட்டு/விடுவிக்கப்பட்டிருப்பின் வினைத்திறன் தடைதாண்டலில் இருந்து விடுவிக்கப்பட்டதாகக் கருதி பதவி உயர்வு வழங்கப்படல் வேண்டும். அதன்பின் ஆசிரிய சேவையின் சகல வகுப்பு/தரங்களுக்கு உரிய பதவியுயர்வு தொடர்பாக சேவை பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தேவைகளுக்கு மேலாக ஆசிரிய பிரமாணக்குறிப்பின் 08 ஆம் அத்தியாயத்தில் காணப்படும் படி அந்தந்த தரம் வகுப்புகளுக்குரிய வினைத்திறன் தடைதாண்டல் அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அவ்வாறு பதவி உயர்வு வழங்கப்படும் போது வினைத்திறன் தடைதாண்டல் சித்தியடைந்துள்ளதாக வழங்கப்பட்டுள்ள சான்றிதழின் செல்லுபடியாகும் திகதி பற்றியும் கவனத்திலெடுத்து செயற்படல் வேண்டும்.

3.5 இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் 13:15 இல் காட்டப்பட்டுள்ளவாறு ஆசிரிய சேவையில் உள்வாங்கல் மற்றும் பதவி உயர்வுகளுக்கு உரிய பட்டப்பின் கல்வி பட்டமென, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனமொன்றினால் வழங்கப்படும் பட்டப்பின் கல்வி பட்டத்தை ஏற்றுக்கொள்வதோடு அதன் பிரகாரம் கல்வி கலாநிதி பட்டம், முதுகல்விமாணி பட்டம், முதுதத்துவமாணி (கல்வி), முதுகலைமாணி (கல்வி), கல்வி முதுவிஞ்ஞானமாணி என்பன பட்டப்பின் கல்வி பட்டங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இலக்கம் 2005/4 ஆம் பொது ஆலோசனை கையேட்டில் 2:2:3 அத்தியாயாத்தின் மூலமாகவும் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பின் விதிமுறைக்கு அமைவாக உள்வாங்கலின் போது, பதவியுயர்வு மற்றும் நியமனங்களின் போது ஏற்றுக்கொள்ளப்படும் அனைத்து கல்விச் சான்றிதழ்கள் (உ.ம். கல்வி பட்டப்பின் பட்டம், பட்டப்பின் கல்வி டிப்ளோமா) உரிய நிறுவனங்களின் மூலமாக உறுதிசெய்யப்பட்டிருந்தால் மட்டும் மேல்நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

3.6 இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் 15 ஆம் அத்தியாயத்தின் விதிமுறைகளுக்கு அமைய, மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழு செயலாளரின் இலக்கம் PSC/EST/7/2/1(ii)/2012 மற்றும் 2018.03.28ம் திகதிய அனுமதிக்கமைவாக சேவையில் பதவி உயர்வு தொடர்பான இடைக்கால விதிமுறைகள் 2019.10.23ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் 11.2.3 அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்தந்த வகுப்புகளுக்கு/ தரங்களுக்கு உரிய முழுமைப்படுத்தப்பட வேண்டிய தொழில் மீளாய்வு தேவையில் இருந்து 2019.10.22 ஆம் திகதி வரை விடுவிக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம், அத்திகதி வரை வேறு தேவைகள் பூரணப்படுத்தப்பட்டு / விடுவிக்கப்பட்டிருப்பின் தொழில் மீளாய்வுத் தேவைகளும் விடுவிக்கப்பட்டதாகக் கருதி பதவி உயர்வு வழங்கப்படல் வேண்டும். அதற்குப் பிறகு ஆசிரிய சேவை சகல தரம்/வகுப்புகளுக்குரிய பதவியுயர்வு தொடர்பாக ஏனைய தேவைகளுக்கு மேலதிகமாக பதிவியுயர்வுக்குரிய சேவைக்காலத்தினுள் தொழில் மீளாய்வுத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பின் 13:6 ஆம் அத்தியாயத்தில் காட்டப்பட்டுள்ளவாறு மேற்பார்வைக்குழுவினால் தொழில் மீளாய்வின் பின்பு "மிகவும் நல்லது/நல்லது/திருப்திகரமானது/திருப்திகரமற்றது" என்ற வகைப்படுத்தலின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்று பதிவியுயர்வு விண்ணப்பத்துடன் முன்னிலைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைக் குழுவின் வகைப்படுத்தல் "திருப்திகரமற்றது" எனில் பதவியுயர்வுக்கு தகைமைப்பெறுவது தொடர்பாக மீண்டும் தொழில் மீளாய்வுக்கு உட்படவேணடும்

3.7 இல 2005/04 கொண்ட கல்விச் சுற்றறிக்கை ஊடாக 1994.10.06ம் திகதிக்கு முன்னர் இரண்டு வருடம் அல்லது மூன்று வருட டிப்ளோமா தகைமையின் அடிப்படையில் அரச பாடசாலையில் நியமனம் பெற்ற மற்றும் 1994.10.06 ஆம் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு அதற்கு பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அத் தகைமையுடனான பயிற்சியற்ற ஆசிரியர்களும் (இல 2005/04 பொது அறிவுறுத்தல் கையேட்டின் 02(IV) பந்தியின் படி) பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகக் கருதி உள்வாங்கல் செய்தல் மற்றும் அக்காலப் பகுதி பதவி உயர்வுக்காக பயிற்சிப்பெற்ற ஆசிரியர் சேவைக் காலமாகக் கருதி செயற்படுவதற்கும், 2005.01.01ம் திகதி முதல் நிலுவைச் சம்பள உரித்துடையது எனக் கருதி சம்பளத் திருத்தங்களை மேற்கொள்வதற்கான விதிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன. 2008.07.01ம் திகதி தொடக்கம் அமுலில் உள்ள ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் விதிமுறைகளின் கீழ் அவ் ஆசிரியர்கள் பயிற்சிப்பெற்று ஆசிரியர்களாகக் கருதி உள்வாங்கல் மற்றும் சம்பளத் திருத்தமும் பதவி உயர்வும் வழங்குவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.8 மொடியூல் ஊடாக வினைத்திறன் தடைதாண்டல் பூரணப்படுத்தும் செயற்பாடுகள் ஆசிரிய நிலையங்கள் ஊடாக செயற்படுத்தப்படல் வேண்டும். அதன்படி மொடியூல் வேலைத்திட்டங்களுக்கு ஆசிரியர்களை அழைப்பது தொடர்பான முன்னுரிமைகளை இனங்கண்டு தேவையான தகவல்களை வழங்குதல் மற்றும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வினைத்திறன் தடைதாண்டல்களுக்கான மொடியூலை தொடர்ச்சியாக மற்றும் விரைவாக அமுல்படுத்தும் தேவைகள் குறித்து அவ்வப்போது தேடிப்பார்த்து செயற்படும்படி வலியுறுத்தப்படுகின்றது.

3.9 ஆசிரிய சேவையில் அந்தந்த தரங்கள் அல்லது வகுப்புகளில் சேவை பிரமாணத்தின் (08) ஆம் அத்தியாயத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக குறிப்படப்பட்டுள்ள காலத்திற்குள் வினைத்திறன் தடைதாண்டல் பூர்த்திசெய்யப்படாதிருப்பின் சேவை பிரமாணக்குறிப்பின் 10:3:4:1:2 மற்றும் குறிப்பு 9 க்கு அமைவாக உரிய காலத்திற்குள் வினைத்திறன் தடைதாண்டல் பூர்த்திசெய்யாமல் உள்ள ஆசிரியர்களின் பதவியுயர்வுத் திகதி, வினைத்திறன் தடைதாண்டல் பூர்த்திசெய்தலை தாமதமாக்கிய காலத்திற்கு சமமான காலத்திற்கு தாமதமாக்குவதோடு, அதற்குரிய நடைமுறை விதிக்கோவையின் X அத்தியாயத்தின் விதிமுறைகளுக்கு அமைவாகவும் செயற்பட வேண்டும்.

3.10 அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006/(XII) உப அட்டவணை II இல் சம்பள அட்டவணை 2008.07.01 ஆம் திகதி தொடக்கம் உள்வாங்கல் செய்யும் முறைமைக்கு மாத்திரம் வரம்பாகும். 2008.07.01 ஆம் திகதி அல்லது அதற்குப்பிறகு ஆசிரிய சேவை நியமனம் மற்றும் பதவியுயர்வுகளின் போது அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006/(XII) உப அட்டவணை I இல் சம்பளத் திட்டம் மற்றும் சம்பள அட்டவணை மாத்திரம் பாவனைக்கு உட்படுத்த வேண்டியதுடன், சம்பள படிமுறையை தீர்மானிக்கும்போது, அடுத்து வரும் தரத்திற்கு உயர்வடையாவிட்டால் நிரலின் கீழ் காட்டப்பட்டுள்ள சம்பள படிமுறை தகுந்த சந்தர்ப்பங்களில் உரித்தாக்கிக் கொள்ள வேண்டும். அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006(V) இன் பிரகாரம் 2006.01.01 ஆம் திகதிக்குப் பிறகு சம்பள படிமுறையின் எல்லையை மீறி சம்பள ஏற்றம் உள்ளதாக கருதப்படுவது எந்தவொரு பதவி வகையில் பதவியுயர்வு தரங்களில் ஆகக்கூடிய தீர்த்திற்குரிய சம்பள படிநிலைக்கு அப்பால் மாத்திரம் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

3.11 பட்டதாரி ஆசிரியர்களின் தொழிற்தகமையாக, ஆசிரியப்பயிற்சி (பட்டப்படிப்பிற்கு முன்போ அல்லது பின்போ) பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை அல்லது கல்விமாணி பட்டத்தை ஏற்றுக்கொண்டதாகக் கருதி செயற்பட வேண்டும். சேவையில் இருக்கும் போது பட்டதாரி அடிப்படையில் நியமனம் பரிமாற்றம் செய்யும்போது கல்வி அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்படிப்பை மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, முதல் நியமனத்திற்குரிய பாடங்களைக் கொண்ட பட்டமாக இருப்பது கட்டாயமல்ல.

3.12 இலங்கை ஆசிரிய சேவை 2-II தரத்தில் இருந்து தரம் 2-I வரையிலான பதவியுயர்வுகளின் போது, நிரந்தர நியமனம் பெற்றிருத்தல், உரிய காலத்திற்குள் (09,07 அல்லது 05 க்குரிய) சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் மற்றும் இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டல் பூர்த்தி செய்திருத்தல், தரம் 2-I இல் இருந்து வகுப்பு 1 வரையிலான பதவியுயர்வுகளின் போது, நிரந்தர நியமனம் பெற்றிருத்தல், மூன்றாவது வினைத்திறன் மற்றும் தடைதாண்டல் பூர்த்தி செய்திருத்தல், 06 வருடங்கள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல், மற்றும் ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏனைய தேவைகளை பூர்த்தி செய்திருத்தல், தொடர்பாக கவனத்தில் எடுத்துக்கொள்ளும் தேவை மற்றும் அத்தேவைகளை பூர்த்தி செய்துக்கொள்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அதிபர்கள் மூலமாக ஆசிரியர்களை அறிவுறுத்தும் தேவை வலியுறுத்தப்படுகின்றது.

3.13 கல்விச் சுற்றறிக்கை இலக்கம் 2005/04 மற்றும் கல்விச் சுற்றறிக்கை இலக்கம் 2008/45 விதிமுறைகளின் கீழ் மேற்கொள்ளப்படும் உள்வாங்கல் மற்றும் பதவியுயர்வுகளுக்குரிய சகல சம்பள திருத்தங்களின் போது, 2005.01.01 ஆம் திகதி தொடக்கம் நிலுவைச் சம்பளம் உரித்தானது எனக் கருதி செயற்பட வேண்டும். 2008.07.01 ஆம் திகதி அல்லது அதற்குப்பிறகான உள்வாங்கள்களின் கீழ வருகின்ற சம்பள படிமுறைகளின் அடிப்படையில், அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006(XII) உப அட்டவணை I இல் அந்தந்த தரங்களுக்கு/வகுப்பிற்குரிய சம்பள படிமுறையை அடிப்படையாகக் கொண்டு 2011.01.01 ஆம் திகதி தொடக்கம் (பதவியுயர்வு அடுத்துவரும் திகதியெனில் பதவியுயர்வு திகதி முதல்) நிலுவைச்சம்பளம் உரித்தானது எனக்கருதி பதவியுயர்வு சம்பள பரிமாற்றத்தை மேற்கொள்ள வேண்டும்.

3.14 1999.12.31 ஆம் திகதி அல்லது அதற்கு முந்திய திகதியிலிருந்து அமுலாக்கப்படும் பதவியுயர்வு தொடர்பாக தாபனக் கோவையின் VII:5 மற்றும் அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 11/94 விதிமுறைகளை உரித்தாகக் கொண்டு முதலாவது சம்பள ஏற்றத் திகதி மற்றும் பதவியுயர்வுத் திகதி இரண்டாகும் போது சம்பள ஏற்றத் திகதியில் இருந்து பதவியுயர்வுத் திகதி வரையில் ஈட்டிய சம்பள ஏற்ற பெறுமதி, பதவியுயர்வு திகதிக்கு பெற்றுக்கொண்ட சம்பள படிமுறையுடன் சேர்க்கப்பட்டு பதவியுயர்வு சம்பள பரிமாற்றத்திற்கான அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

3.15 2000.01.01 ஆம் திகதி அல்லது அதற்குப்பிறகான திகதியொன்றில் இருந்து அமுலில் உள்ள பதவியுயர்வு தொடர்பாக பதவியுயர்வு சம்பள பரிமாற்றத்தின் போது, முதல் சம்பள ஏற்றத் திகதி மற்றும் பதவியுயர்வுத் திகதி இரண்டாகும் போது தாபனக் கோவையின் VII:5:3 இன் படி சம்பள ஏற்றத்திகதியில் இருந்து பதவியுயர்வுத் திகதி வரையில் ஈட்டிய அந்த சம்பள ஏற்றத்தின் அடிப்படையில் கணக்கிட்டு ஈட்டிய சம்பள ஏற்ற பெறுமதிக்கு சமமான தொகையை செலுத்துவதற்கு வசதியாக, சம்பள பரிமாற்ற கடிதத்தில் குறிப்பிட வேண்டியதோடு, அவ்வண்ணம் ஈட்டிய சம்பள ஏற்ற பெறுமதியை கருத்திற்கொள்ளாது, பதவியுயர்வு திகதி வரையில் பெற்றுக்கொண்ட சம்பள படிமுறையை அடிப்படையாகக்கொண்டு பதவியுயர்வுச் சம்பள பரிமாற்றத்தை மேற்கொள்ள வேண்டும்.

3.16 புதிய ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட 2008.07.01 ஆம் திகதிக்குப்பிறகு அடுத்து வரும் தரத்திற்கு /வகுப்பிற்கு பதவியுயர்வு வழங்கும்போது புதிய விதிமுறைகளின் கீழ் பதவியுயர்வுக்குத் தேவையான சேவைக்காலத்தை கணக்கிடும் போது தற்போதைய தரத்திற்கு /வகுப்பிற்கு உண்மையாகவே நியமனம் பெற்று/ பதவியுயர்வு பெற்றுக்கொண்ட திகதியை அடிப்படையாகக் கொண்டே ஆகும்.
(உ.ம்.2007.01.01 ஆம் திகதி தொடக்கம் 2-I தரத்திற்கு பதவியுயர்வு பெற்ற ஒருவர், அத்திகதியில் இருந்து ஆறு (06) வருடத்தில் 1 வகுப்பிற்கு பதவியுயர்வுக்காக தேவைப்படும் சேவைக் காலம் 2013.01.01 திகதிக்கு பூரணப்படுத்தியுள்ளதாகக் கருத வேண்டும்.

3.17 2008.07.01 ஆம் திகதி தொடக்கம் 2010.12.31 ஆம் திகதி வரையிலான காலத்திற்குள் ஓய்வு பெற்றுள்ள ஆசிரியர்களின் உள்வாங்கல் மற்றும் சம்பளத் திருத்தங்கள், அனுமான அடிப்படையில் சம்பள பரிமாற்றத்தை ஏற்படுத்தி, அதன் பிரகாரம் ஓய்வுச்சம்பளத்தில் திருத்தங்கள் மேற்கொண்டு திருத்தப்பட்ட ஓய்வூதியத்தை 2011.01.01 ஆம் திகதியிலிருந்து செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, 2011.01.01 ஆம் திகதிக்குப் பின்பு ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பு வெளியிடப்பட்ட திகதி வரையில் ஓய்வு பெற்றுள்ள ஆசிரியர்கள் தொடர்பாகவும் அவ்வண்ணம் செயற்பட்டு திருத்தப்பட்ட ஓய்வூதியத்தை ஓய்வுபெற்ற திகதியில் இருந்து செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

3.18 ஆசிரிய சேவையின் பதவியுயர்வு விண்ணப்பங்களில் சம்பள ஏற்றம் 09 வரையில் காட்டப்படுதல் மற்றும் வினைத்திறன் தடைதாண்டல் தொடர்பான விடயங்களின் கீழ் “ வினைத்திறன் தடைதாண்டல் பூர்த்தி செய்தல் செல்லுபடியாகும் திகதி”யையும் உள்ளடக்கப்பட வேண்டியதோடு, தொழில் மீளாய்வு மதிப்பீடு தொடர்பான மேற்பார்வைக் குழுவின் முடிவு (மிக நல்லது/நல்லது/திருப்திகரமானது/திருப்திகரமற்றது) எனக்குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ் பிரதியை முன்னிலைப்படுத்தப்படும் என்ற வாசகமும், விண்ணப்பப்படிவத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரின் அறிக்கையில் குறிப்பிட்ட சம்பள ஏற்றத் தொகையை ஈட்டப்பட்டுள்ளது என்ற வாசகத்தையும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

3.19 கல்விச் சுற்றறிக்கை இலக்கம் 2008/45 பிரகாரம் 1994.10.06 ஆம் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்ற தொழிற்தகைமைகளுடன் கூடிய மற்றும் அவ்வாறல்லாத பட்டதாரி ஆசிரியர்கள் தொடர்பாக உள்வாங்களின் போது, இலக்கம் 975/6 மற்றும் 1997.05.14 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் கல்விச் சுற்றுநிருப இலக்கம் 97/5 இன் விதிமுறைகளுக்கு அமைவாக, 1994.10.06 ஆம் திகதிக்கு ஈட்டிய புள்ளிகளின் பிரகாரம் உரிய தரத்திற்கான சம்பளப் படிமுறை மற்றும் எஞ்சிய காலம் இருப்பின் அடுத்துவரும் சம்பளப் படிமுறை (இலக்கம்/ஆசிரிய சே/இ/கு/1 மற்றும 1997.08.14 மற்றும் இலக்கம் ED/02/29/10/20/19/ශේ மற்றும் 2010.04.01 ஆம் திகதிய சுற்றுநிருப கடிதத்தின் பிரகாரம்) உரித்துடையது என கருதி, அடுத்துவரும் தரத்திற்கு /வகுப்பிற்கு பதவியுயர்வு பெறுவதற்குத் தேவையான எஞ்சிய புள்ளிகளை ஈட்டிய திகதி தொடக்கம் பதவியுயர்வு உரித்தானது எனக் கருதி செயற்பட வேண்டும். புதிய ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பு விதிமுறைகள் அமுல்படுத்தும் போதும், அவ்வகைக்குரிய ஆசிரியர்கள் பட்டதாரி மற்றும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா தகைமையின் அடிப்படையில் இ.ஆ.சே. 2-II தரத்திற்கு நியமனம் பெற்றுள்ளதாகக் கருதி உள்வாங்கல் மற்றும் பதவியுயர்வுகளின் போது, செயற்பட வேண்டும். அதற்குரிய சம்பளமானது அரச நிருவாக சுற்றுநிருபம் 06/2006(XII) இல 10 வது நிரலின் கீழ் தயாரிக்கப்படல் வேணடும்.

3.20 1994.10.06 ஆம் திகதி தொடக்கம் அமுலில் உள்ள விதிமுறைகளின் கீழ் 2010.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் அமுலாக்கப்பட வேண்டிய, ஆனாலும் அமுல்படுத்தப்படாத ஆசிரிய சேவை பதவியுயர்வு, அந்த விதிமுறைகளுக்கு அமைவாக முதலில் அமுல்படுத்தப்பட வேண்டியதுடன், அக்காலப்பகுதிக்குரிய புதிய பிரமாணக்குறிப்பின் கீழ் உள்ள பதவியுயர்வுகள் அதற்குப்பிறகு அமுல்படுத்தப்படல் வேண்டும்.

3.21 இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பின் 5:1:1:2 குறிப்பு 1 மற்றும் கல்விச் சுற்றுநிருப இலக்கம் 35/2014(I) இல் 7 ஆம் அத்தியாயத்தின் விதிமுறைகளின் படி 2008.07.01 ஆம் திகதிக்கு சேவையில் இருக்கும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமாதாரி ஆசிரியர்களின் சம்பளம் கல்விச் சுற்றுநிருப இலக்கம் 35/2014(I) இல் 4-II(ஆ) அத்தியாயத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக முதலில் பரிமாற்றம் செய்யப்படவேண்டியதுடன், 2014.12.31 ஆம் திகதி வரையிலும் ஆசிரிய சேவை 3-I(ஆ) தரத்தில் உள்ள தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரி ஆசிரியர்களின் சம்பளமானது அரச நிருவாக சுற்றுநிருப இலக்கம் 06/2006(XII) உப அட்டவணை II இல் 6 வது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தேச சம்பள படிமுறையின் கீழ் 3 வது படிமுறையான ரூ.15,000/- சம்பள படிமுறை முதலாவது சம்பள படிமுறையென கருதி படிப்படியாக மீண்டும் பரிமாற்றம் செய்யப்பட்டு 2015.01.01 திகதிக்குரிய சம்பள படிமுறையில் அமர்த்தப்படல் வேண்டும். (உ.ம். 2012.06.01 ஆம் திகதி தேசிய போதனாவியல் டிப்ளோமா நியமனம் பெற்ற ஒருவர் அத்தினத்திற்கு ரூ.15,000/- சம்பள படிமுறை அனுமானமாக கிடைக்கப்பெற்றது எனக் கருதி 2015.01.01 ஆம் திகதி தொடக்கம் ரூ.15,360/- படிமுறையில் அமர்த்தல்) 2015.01.01 ஆம் திகதி மற்றும் அதற்குப்பிறகு ஆசிரிய சேவை 3-I(ஆ) தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது ஆரம்ப சம்பள படிமுறை ரூ.15,000/- எனக் கருதி செயற்பட வேண்டும்.

3.22 இலங்கை ஆசிரிய சேவையின் 3-II மற்றும் 3-I(இ) தரத்தைக் கொண்டவர்களுக்கு ஆசிரிய பயிற்சி அடிப்படையில் 3-I(ஆ) தரத்திற்கு அல்லது பட்டத்தின் அடிப்படையில் 3-I(அ) தரத்திற்கு அல்லது கல்விமாணி பட்டத்தின் அடிப்படையில் 2-II தரத்திற்கு நியமனம் கிடைக்காமையால் ஆசிரிய சேவை பதிவியுயர்வுக்காக இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பின் நிதி ஒழுங்குகளை வழங்கவில்லை என்பதை இத்தால் வலியுறுத்தப்படுகின்றது.

3.23 இலங்கை ஆசிரிய சேவை பதவியுயர்வின் போது வழங்கபடும் பதவியுயர்வு கடிதங்களில் அடுத்துவரும் தரத்திற்கு/வகுப்பிற்கு பதவியுயர்வுக்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய வினைத்திறன் தடைதாண்டல் மற்றும் பூரணப்படுத்த வேண்டிய தொழில் மீளாய்வு தேவைத் தொடர்பான விதிமுறைகள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

3.24 புதிய சேவை பிரமாணக்குறிப்பின் விதிமுறைகள் 2008.07.01 ஆம் திகதி தொடக்கம் அமுலாகும் அடிப்படையில் அதற்குரிய உள்வாங்கல் சம்பளத் திருத்தம் கல்விச் சுற்றுநிருப இலக்கம் 35/2014(I) இன் விதிமுறைகளின் கீழ் 2008.07.01 ஆம் திகதி தொடக்கம் அமுலாக்கப்படல் வேண்டும். அங்கு உள்வாங்கலுக்கு முன் இருந்த சம்பள ஏற்றத் திகதி உள்வாங்கலின் பிறகும் அமுலாகும் என கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். உள்வாங்கலின் பிறகு பதவியுயர்வின் போது, பதவியுயர்வு திகதி புதிய சம்பள ஏற்றத் திகதி என கருத வேண்டும்

3.25 ஆசிரிய சேவையின் பதவியுயர்வு தொடர்பாக இடைக்கால விதிமுறைகள் 2019.10.23 ஆம் திகதி வரையில் நீடிப்பதன் அடிப்படையில் 2019.10.22 ஆம் திகதிக்கு பதவியுயர்வுக்கான ஏனைய தேவைகளை பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு வினைத்திறன் தடைதாண்டல் மற்றும் தொழில் மீளாய்வு தேவைகளை கருத்தில் கொள்ளாமல் பதவியுயர்வு வழங்கப்படும் என்பதால் அதிபர்கள் மூலமாக ஆசிரியர்கள் அறிவுறுத்தப்பட்டு பதவியுயர்வு விண்ணப்பங்கள் முன்னிலைப்படுத்துவதற்கு ஆவனசெய்து ஆசிரிய சேவை பதவியுயர்வு விரைவில் வழங்குவதற்கு செயற்பட வேண்டும்.

3.26 ஆசிரிய சேவையின் பதவியுயர்வுகளுக்கு உரிய நிலுவைச் சமபளம் வழங்கும் நடவடிக்கை, பதவியுயர்வு கடிதங்களை வழங்கியவுடன் முடிவு செய்வதற்கு உரிய கிளைகள் நடவடிக்கை மேற்கொள்ளும் தேவை வலியுறுத்தப்படுவதோடு, அதன் மூலமாக நிலுவைச் சம்பளம் வழங்குவது தாமதமாகுவதில் நிதி ஒதுக்கீடு செய்யும்போது எழும் பிரச்சினைகளை தவிர்ப்பதற்கும் இடமுண்டு.

பத்மசிரி ஜயமான்ன
செயலாளர்
கல்வி அமைச்சு